**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 151 of 2025

Depositions of PW -5 witness for ________ Prosecution / Defence / Court

Name : சியோன் மேஷாக்

Father's Name : புஷ்பராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of November** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் சுல்தான்பேட்டையில் குடியிருந்து கொண்டு பிசினஸ் செய்து வருகிறேன். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 03.12.2021 ஆம் தேதி மதியம் சுமார் 2 மணி அளவில் அன்றைய தினம் மதியம் 12.30 மணிக்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய போவதாக தெரிவித்து என் முன்னிலையிலும் பிரனேஷ் என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் பிரனேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மாகசர் **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் ஆனது 12:30 முதல் ஒரு மணிக்குள்ளாக நடந்தது. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் என்ன வகையான

வாகனம் என்றால் இரண்டுமே இருசக்கர வாகனம். வாகனத்தின் பதிவு எண் ஞாபகம் இல்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது சம்பவ இடத்தில் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.13 18:00:39 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**